16883.4

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவபூஜையகவல்.

திருவாரூர்

ஞானப்பிரகாச பட்டாரகர்

அருளிச்செய்தது.

இது

எட்டயாபுரம் சமஸ்தான வித்வான்

திருமயிலை, வி. சுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

விலை அணா 1.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவபூஜையகவல்.

காப்பு.

வெண்பா.

ஓசைச் சிவாகமத்தி னுள்ளபடி கண்டமைத்த
பூசைத் திருவகவல் போற்றவே — யாசில்
பொருணயமுஞ் சொன்னயமும் போதத்து ணல்குங்
கருணைபொழி வாரணமே காப்பு.

சூரியபூஜை.

திருவுறு செல்வமுஞ் சிறந்தமெய்ப் புகழும்
பெருகுமெய்ஞ் ஞானமும் பெற்றிட வேண்டிப்
புத்திசேர் சூரிய பூசை புரிவோர்
அத்திர பஞ்சரத் தகத்தின ராக
மண்முத லாக மாயையி றாக
வெண்ணுறுந் துவமனைத் திகலறக் கடந்தே
மிக்குள சுத்த வித்தையின் வடிவெனத்
தக்கதோர் பூசைத் தானத் தடைந்தே
கூறுப கரணங் குறைவற வமைத்தபின்

சிவபூஜையகவல்.

பூருவ முகமுறப் பூசைசெயும்படி
அத்திர மந்திரத் தங்கை புறங்கைகள்
சுத்திசெய் தத்தத் துணைதனைக் கூட்டி
மருவிய சூரிய மந்திர மதனாற்
பெருவிர லிரண்டும் பிணிக்கவுள் வைத்தே
இதயமந் திரங்கொண் டிணைப்பெரு விரல்களை
விதமுறு தர்ச்சனி விரல்களா லூன்றிச்
சிறுவிரல் முதலாய்ச் சிரஞ்சிகை கவச
முறுவிரன் மூன்றினு முறைப்பெரு விரலான்
நிசித்தவற்பி னேத்திர மதனால்
வசித்திரு தர்ச்சனி மத்திம மடக்கிப்
பொருவிய வினையாற் பிறங்குதர்ச் சனிகளை
மருவிய வத்திர மந்திரத் தியற்றிக்
கவசமந் திரத்தாற் கரங்களைச் சுற்றி
அவ்வணத் தூலத் தகங்கைகள் கூட்டிக்
காரியா சந்தனைக் கவின்பெற வியற்றி
புறம்பிக மூலத் தாறசத்தி பண்ணித்
திகழுற மார்பு சென்னி சிகைகளில்
இதய முதலா வெண்ணுறும் மந்திர
மணிவிரன் முதலா யடையுமூ விரலாற்
பணிவுறு நியாசம் பண்ணியதற்பின்
களமுதற் றனுங்கள் காட்டிதர்ச் சனிகளை
வளமுறு கவச மந்திரத் தியற்றி
னாழிய தர்ச்சனி நடுவிர லிமிர்த்து
நீடுநேத் திரங்களி னேத்திரங் கொடுத்தே
அத்திர மந்திரத் தனுமிகை களினால்
சுற்றிடு நாதத்தல பிராண்டினு மூன்றி

யசைவுறு மந்திரத் தங்கைகள் கொட்டித்
திசைதொறுஞ் செய்து திக்குபந் தனமுங்
கலசங் கொண்டு கருதுதர்ச் சனியால்
அவகுண் டனஞ்செய் தாகமெங் குமுற
முந்திய சூரிய மூலமந் திரத்தாற்
சிந்தைகொண் மாகமுந் திரையுங் கொடுத்தே
நேரியாங்கதி யாசநத் தாற்றனைச்
சூரியன் றனது சொரூபம தாக்கிப்
பைமணிச் சென்னிறப் பாத்திரந் தன்னிற்
செய்மலர் முதலாந் திரவியம் பொருந்திச்
செழும்புன னிறைத்த தரிசனார்க் கியத்தை
முழுந்தா ளூன்றி முடியள வெடுத்து
மூலமந் திரத்தான் முன்னுறக் கொடுத்தே
மாலற வவன்றன் மந்திரஞ் செபித்தே
அத்திர சுத்திசெய் தமர்ந்தபாத் திரத்தில்
வைத்திடு கடோர்க்க மந்திர மதனுன்
மென்னுத லருண விந்துவி னமுதெனத்
தன்னிகர் பரிமளத் தண்புன னிறைத்தே
அருணன்மூலத் துட னங்கமா றமைத்துக்
கருணையோ டத்திர கவசமந் திரங்களிற்
றிக்குபந் தனத்துடன் றிகழவ குண்டனந்
தக்கவா றியற்றித் தரணிமூலந்தான்
முன்னிய தேனு முத்திரை கொடுத்தபின்
றன்னையும் பூசைத் தானத் துடனே
யுளம்பெறு பூசை யுபகர ணங்களைத்
தாளங்குமந் திரங்கொடு சுத்தி புரிந்தே
தாங்கெழிற் பூசைத் தானந் தன்னை
ஓங்குமந் திரம்பயி லொருமலர் தன்றாற்

சுற்றிவிக் கினம்பல துருசுற விடுத்தபின்
நற்றிய வேதிகை நடுவுற வமைத்திடுஞ்
செம்பொனாதிகளாற் செய்திடு மெட்டிதழ்
உம்புயர் தன்னி லருச்சனை செயும்படி
வனப்புறு நிருதி வாயுவீசானம்
அனற்றிசை யென்னு மடைவுநாற் றிசையினும்
பெருக்குறு தண்டி பிங்கலன் கணபதி
குருக்களிங் கவர்தமைக் குணம்பெறச் சாத்திப்
புகல்நடு விற்பிர பூதாசனந்தனை
யகமகிழ்ந் தருச்சித் தனற்றிசை முதலாய்த்
தருமெழில் விமலன் சாரணா ராத்தியன்
பரம சுகனெனும் பாதசிங் கங்களும்
பன்னுபீடந்தனிற் பத்மா சனமும்
பொன்னலர் கொண்டு பூசனை செய்தபின்
கீட்டிசை யிதழ்முதற் கிளரித ழெட்டினு
மீட்டிய கன்னிகை யீசா னத்தினு
மொய்த்திரு தீப்தை முதலா மொன்பது
சத்திகள் தம்மையுந் தகைபெறச் சாத்தி
விற்புற முத்திரை விதமுறக் காட்டி
அற்புத மலர்நடு வர்க்கா சனத்தையுந்
திருந்திட வருச்சனை செய்தாங் கதன்மேற்
பரந்திடு வெண்ணிறப் பங்கயா சனமுஞ்
சென்னிற மண்டலந் திகழ்திரு மேனியுந்
தன்னிரு கரத்து வெண்டா மரைமல
ரொருதிரு முகத்தொளி ருபயலோசனமும்
அருணவாடையும்பயி லருணன் வடிவினைக்
கருத்துற நினைந்து கடோர்க்கமந் திரத்தால்

இருந்திய பின்ன ரிருவிரல் கொண்டே
நேத்திரங் கொடுத்து நிறைதரு மலர்கள்
ஆர்த்தவஞ்சலியி லருணா யிந்துவிறுங்
கரந்தனில் வாங்கிய கதிரவன் றன்னை
வரந்தரு மூல மந்திர மதனான்
மெய்தரு மிசைய பீதிலாவாகனஞ்
செய்துதாபனத்தொடு சிறந்தசன்னிதானஞ்
சன்னிரோதனமிவை தகைபெற வியற்றி
முன்னிய விம்ப முத்திரை காட்டித்
தருமெழி னேத்திரந் தவிரவஞ் சங்கமு
முரமுதற் கராந்த முறநியா சம்பணி
மிக்கமூலத்தால் விருப்பொடு கூட்டித்
திக்குபந்தனத்தொடு செய்தவகுண்டனம்
ஆர்த்தமூ லத்தா லாவின்முத் திரையொடு
சேர்த்திடு மகாமுத் திரையுங் கொடுத்தே
முறைபுகழ் கடோர்க்க மந்திர மதனான்
அறுகல ரரிசி யடைவுறச் சாத்தி
மருவிய கடோர்க்க மந்திர மதனாற்
சருகிய வெண்ணெய்க் காப்புமாக் காப்பிவை
அடையினி லளித்தாங் கபிடே கித்தே
படைசெவ் வாடை புனைந்தவை நினைந்தே
சந்தனங் குங்குமந் தாமரைப் போதொடு
செந்தொடை மலர்பல சிறந்திடச் சாத்திச்
செங்கதிர் மந்திரஞ் செபத்தொடு முக்கால்
அங்கெதிர் புஷ்ப வஞ்சலி செய்தே
கொண்டிரு மருக்கியங் கொடுத்தவதற்பின்
முண்டக விம்ப முத்திரை காட்டித்
திருந்துமங் கங்களைத் திருமேனியி லுறப்

புரிந்துல யாங்க பூசனை புரிந்தே
கூறில யாங்கங் கொடுத்திட வாங்கிச்
சிரிதயஞ்சிரஞ் சிகைகவசங்களை
யிருமைகொ ளங்கி யீசன் றிசையுடன்
நிருதிவா யுக்களி னிறைபெறச் சாத்தி
யிலங்குநேத் திரங்கதி ரெதிர்பெறச் சாத்தி
நலங்கொள்கீழ்த் திசைமுத னாற்றிசை தன்னினுந்
தருகிய வத்திரந் தன்னையுஞ் சாத்தி
இருதய முதனான் கிசைந்திடு நேத்திர
மேவுமந் திரமென விளங்குமூ வகைக்குங்
கோவின்முத்திரையொடு கோவிடாணமெனு
முத்திரை திராசனி முத்திரை யெனுமிவை
யத்தகு மவைக ளடைவினிற் கொடுத்தே
முன்னிய கீழ்த்திசை முதலித மெட்டினுந்
தன்னிகர் சோமன் றனைமுத லாகக்
கேதுவீ றான கிரகமெட் டினையும்
ஓதிய வடைவினி லுறைந்திடச் சாத்திக்
கரந்தனி லுறநமஸ் காரமுத் திரையுடன்
அருந்துநல் லருக்கிய மவர்தமக் குதவிப்
படைக்குநைவேத்தியம் பானீயத்துடன்
அடைக்கா யமுது மருணனுக் குதவித்
திகழ்தரு தூபந் தீப முதலாந்
தருமுப சாரந் தந்த வதற்பின்
அன்புட னாசம னார்க்கியங் கொடுத்தே
முன்புறச் சூரிய மூலமந் திரந்தனை
இயன்றன செபித்தபி னிரவிக் குதவிப்
பயின்றிடு தோத்திரம் பற்பல கூறி
யுன்னியட் டாங்க முறமே தினியிற்

பன்னிரு காலும் பணிந்துட னெழுந்தே
மாசறு கடோர்க்க மந்திர மதனு
லாசறு பராமுக வர்க்கியங் கொடுத்தே
தேவனே சிறியேன் செய்திடும் பிழைகள்
யாவையும் பொறுத்தரு ளெனமுறை வணங்கித்
தயங்குமா றங்கந் தனைமுத லாக
வயங்கிய பலவகை மந்திரத் தொகையினை
அத்திர மந்திர மமர்த்தாராச
முத்திரை கொண்டு முறைமையி லெழுப்பி
முற்பயில் கடோர்க்க மூலமந் திரத்தால்
எற்பயில் சூரிய னிடத்தனிற் கூட்டி
யுதயமாத் தாண்டனை யுத்துவா சனஞ்செய்
திதய மனத்தி லெழுந்தரு ளப்பணி
யினிதமர் வேதிகை யீசா னத்துத்
தனியெழிற் றேஜ சண்டன் றன்னையும்
அதன மூர்த்தி யவன்றன் மூலத்தாற்
போதவை கொண்டு பூசனை புரிந்தே
அடுத்திடு பாத்திய மாசம னார்க்கியங்
கொடுத்துவின் மாலியங் குறைவினை வேத்தியம்
அவமதி யின்றி யடைக்கா யுடன்பல
உபகர ணங்க ளுதவிய பின்னர்
வருந்து வினைகெட வணங்கியுத் யாபனம்
புரிந்திடு சூரிய பூசையின் முறைமையை
நலம்பெறக் கற்பவர் நயப்பொடு கேட்பவர்
நிலம்பெறு புகழொடு நீடுவாழ் பவரே.

சூரியபூஜை முற்றிற்று.

சிவபூஜை.

—:o:—

பூங்கம லத்தயன் புண்டரீ கக்கணன்
ஈங்கிவர் காணரு மிலிங்கம தாகிய
சங்கரன் றனையலர் சாத்துதல் புரிவோன்
அங்கவன் றென்பா லாசனத் திருந்தே
ஆசமனஞ்செய் தருங்கர நியாசமும்
தேசமோ டங்க நியாசமுஞ் செய்தே
பாத்திர மத்திர பரிசுத்தி செய்தே
யேத்திடு மிதையத் திரும்புண ணிறைத்தபின்
ஓமெனு மந்திர முச்சரித் தெழுகாற்
சாமானியார்க்கியந் தனையருச் சித்தே
திக்குபந்தனாதி செய்தாங் கதனாற்
றக்கதுவாரந் தனைச்சுத்தி செய்தே
கீட்டிசைத் துவாரங் கிளருமேற் படிமிசை
வாட்டமில் வடபால் வாரண முகனையுந்
தாங்குறு தென்பாற் சரஸ்வதி தன்னையு
மீங்கிவர் நடுவி லிலக்குமி தனையும்
அந்தவாயிலின்வடக் கடுத்ததென் புறங்களின்
நந்திகங்கைகளை நயப்புடன் சாத்தி
வாயிலின் றெற்கு வடக்கடுத் திடவே
யேசின்மாகாளன் யமுனையைச் சாத்திப்
பத்திசேர் சிவமயப் பார்வையி னாலும்
அத்திரந் தெறித்த பத்திரத் தாலும்
பாசுபதாத்திரப் பாததா டனத்தினும்
வசில்வான் முதன்மூ விடையூறு தீர்த்துக்

கிளர்ந்திடு துவாரக் கீழ்ப்படி நடுவிற்
றுளங்கிய வத்திரத் துவாரபாலகனையும்
நீங்கரி தான நிருதியின் றிசையின்
பாங்குறு வாஸ்து பதியையுஞ் சாத்திப்
பொருந்திடு துவார பூசைசெய் ததற்பின்
பரந்திடு மந்திர பஞ்சரங் கருதிச்
சோர்வற வைவகைச் சுத்திசெய் திடவே
நேர்பட வருங்கர நியாசம தியற்றிப்
பாதப் பெருவிரற் பற்றியி ருருவாய்
ஆதா ரத்தை யடைந்தவ தற்பின்
உச்சி யளவு மோருரு வாகி
அச்சமி லிதைய மாதியைந் திடத்தினும்
பிங்கலை யிடைகளின் பின்னலுற் றதோமுகப்
பங்கய முகிழப் பஞ்சகம் பொருந்திய
சுழிமுனை தன்னிற் றுளையிடத் தமுதம்
பொழிதரு சத்தியின் பூரண நிறைந்தே
ஊங்காரத் துடனுள்ளே வாயுவை
வாங்கி நிறுத்தி மறித்துமே னோக்கி
யம்புய முகைக ளலர்ந்துமே னோக்க
உம்படென் றேதெறித் தாற்றசோ டிகையான்
மாருதந் தன்னை வலத்தினில் விடுத்துப்
பூரக கும்பகம் புரிந்து மீளவுஞ்
சீருறு மிதையச் செழுந்தா மரையிற்
றாரகை போலத் தகைபெற விளங்கிய
அம்மெனு மெழுத்தா மான்மா வதனைச்
செம்மையூங்காரச் சிகையினி லேற்றி
அழுத்திய வாயு வதனைமே னோக்க

டொழிந்தசங்கார முத்திரை யதனால்
அவாவியான்மாவை யான்மமந் திரத்தாற்
றுவாதசாந்தத்திற் சோதியிற் கூட்டிச்
சந்தப் பரிசஞ் சதுர்முக னிடத்தினு
மெத்திய விரதம் விண்டுவி னிடத்தினு
முருவங் கந்த முருத்திர னிடத்தினும்
அருவுரு புந்தியோ டாங்கா ரந்தனை
மகேச னிடத்தினும் மனோவிந்துக்களைத்
தகாமல மொழிக்குஞ் சதாசிவ னிடத்தினும்
ஐவ ரிடத்தினு மவைசென் றொடுங்கச்
செய்வது சூக்கும தேகசுத் தியதாம்
உடலினிற் றனித்தனி யோரைம் பூதம்
அடைவுறக் குணம்வடி வனைத்தையு நினைந்தே
மருவிய வாயுவை வாங்கி நிறுத்தி
விரவமே னோக்கி விடுத்திடும் போதில்
இறைஞ்சிய நிவிர்த்தி யிலாமெனு மெழுத்தை
அறைந்துமண் ணின்குண மைந்தையு நீக்கி
யுவந்திடு பிரதிட்டையி னுவீமெனு மெழுத்தை
நவின்றுநீரின்குண நான்கையு நீக்கி
யொழிந்தபின் வித்தையி னுரூமெனு மெழுத்தை
மொழிந்தன லின்குண மூன்றையு நீக்கி
யடுத்திடு சாந்தியி னைமெனு மெழுத்தை
யெடுத்துரைத் ததன்குண மிரண்டையு நீக்கிச்
சாந்தியா தீதந் தனிலௌமெனுமெழுத்
தோர்ந்துரைத் ததன்குண மொன்றையு நீக்கி
மண்முத லைந்தையும் வாயு வனல்புனல்
திண்ணமே தினியொடு சிற்பரா காசம்
இவைகளி னுலடர்த் திட்டபின் மேனியை

அவையவை யின்வடி வாக நினைந்தே
மறம்பொரு மத்திர மந்திர மதனும்
பிறங்கிய வலக்காற் பெருவிரற் றன்னி
லாக்கம தாக வுதித்தவெங் கனலால்
ஆக்கையின் குற்ற மனைத்தையு மடர்த்தே
உறுமல பந்த மொழிந்தொரு வெளியாய்ச்
சருவசூனியமாந் தன்மையை நினைந்தே
உய்த்திடு நாடிக ளுள்ளும் புறம்புஞ்
சத்தியி னமிர்த தாரையா னனைந்தே
அகார வுகார மதனொடு மகாரம்
பகாத பிரணவப் பாவனை யதனாற்
சித்த மாகிய செழுந்தா மரையிற்
சுத்தவித்தையெனுந் துலங்குமா தனத்தில்
அம்ருதல் விந்து வளவா நாற்கலைச்
செம்மைய தாகத் திகழ்பிர ணவத்தால்
இலயத்தானத்தி ழிக்கசூக்குமவுடல்
நிலைபெற வந்து நிகழ்ந்தமை கருதி
ஐங்கலைப் பிரணவ மாத்மமந் திரத்தாற்
பொங்கிய வாயுவின் பூரகத் துடனே
சூக்கும வுடலிடைத் துவாதசாந் தத்தினு
நீக்கியான்மாவை நிலைபெற வைத்தே
யருள்பொழி யமுதா லபிடேகித்தே
நிறைதரு மங்க நியாதஞ் செய்திடச்
சூக்கும சுத்தி தூலசுத்தியெனு
மாக்கையின் சுத்தி யாத்மசுத் தியதா
மெண்ணிய முக்குணத் திருதிறஞ் செம்மை
வெண்ணிற மண்டில பீமிசை யபின்.

நாபிகந் தந்தனி னாலிரண் டங்குல
மேவிய னாளமிசை வெண்ணிறம் பயில்
போதமா மெட்டிதழ்ப் புண்டரீ கத்துறை
சோதிலிங் கந்தனிற் றுவாதசாந் தத்தினு
மாவா கனஞ்செய் தமலனை மஞ்சனம்
பூவாதி யாற்புறம் போலருச் சித்து
விந்துவி னமுதான் மெய்ஞ்ஞா னாக்கினி
யுந்திக் குண்டத் தோமம் புரிந்தே
வியன்றரு பூசனை வேள்வியி னுள்ள
பயன்றனை முழுதும் பரமனுக் களித்துப்
புருவ நடுவினிற் பொங்கொளித் தாரகை
யுருவுறு சோதியை யுறநினைந் திருந்தே
புறம்பினு மென்பாற் பூசைகொண் டருளென
அறப்பெற வேண்டி யனுமதி பெற்றிடு
மந்திரி யாகமு மான்ம சுத்தியு
மிந்த முறைமையி னீசனுக் கியற்றித்
தக்கதோர் பூசைத் தானந் தன்னை
விக்கின நீக்கி வியந்தகாப் புறவே
பத்திர மந்திர மதுகொடு முக்காற்
கைத்தலந் தட்டிக் கண்டவெண் டிசையினுந்
திக்குபந் தனமுஞ் செய்தத் திரத்தா
லக்கவசத்தா லவகுண் டனத்துடன்
மெத்திய கீழொடு மேலு நிறைந்திடு
சத்தியின் குழுவுறச் சத்திமந் திரத்தாற்
றேனுமுத் திரையுஞ் சீர்பெற வியற்றித்
தான சுத்தி தன்னையும் புரிந்தே
மருக்கமம் பாத்திய மருவுமா சமன
மருக்கிய மூவகைக் கமைத்தபாத் திரங்களை

பத்திர சுத்திசெய் தங்குசத் தமுதம்
வைத்திடு மிதய மந்திரத் தரைத்தே
நாலா றெட்டென நவிற்றிர வியங்க
ளேலா தொழியி னிசைந்தசங் கனமுடன்
றணைந்திடா தறுகு தண்டுல நறுமல
ரணைந்தபாத் தியமுந லாகிய மூன்றினுட்
பொருவிலா றங்கம் பொருந்துபாத் தியமும்
பிரமமா றங்கம் பிறங்கா சனமும்
திதற வமைத்தபின் திகழர்க் கியந்தனை
யாதன மூர்த்தி யைமுக மந்திரஞ்
சீலமாம் வித்தியா தேகநேத் திரமுடன்
மூல மிதய முடிசிகை கவச
மந்திர மூல மடைவுமந் திரங்களிற்
பத்தலர் கொண்டு பூசனை புரிந்தே
யிவ்வகை மூவிடத் திசைந்தபாத் திரங்களி
லவ்வவ மந்திரத் தபிமந் திரித்தே
திக்குபந் தனுதி தேனுமுத் திரைதரு
மர்க்கியந் தனைக்கொண் டத்திர மதனாற்
றன்னையும் பூசைத் தருதிர வியங்களோ
டின்னியல் சுத்தி யியற்றிமீண் டவைதனை
யறைந்திடுங் கவசத் தங்கையான் மூடிச்
சிறந்திட வபிமந் திரித்திதயத் தா
லழுந்திடுங் கவசத் தவகுண் டனத்துடன்
மொழிந்திடு தேனு முத்திரை கொடுத்தபின்
சுத்திநால் வகைசெயுந் தோயகும் பத்துடன்
வத்திர மந்திர மந்திர மதனான்
முந்துறக் கழுவி மொழிந்திடு மிதய

மந்திரங் கொண்டு வடித்தெடுத் தமைத்தே
யார்த்தமஞ்சனந் தனை யருக்கியந் தன்னிற்
றோய்த்திடு மலராற் சுத்திசெய் திப்படி
புண்ணிய பூசையி னுபகர ணம்பல
துன்னிய திரவிய சுத்திசெய் ததற்பின்
தன்னா தனத்திற் றருஞ்சிவா தனத்தையு
முன்னிய மார்பினின் மூர்த்தி தன்னையுஞ்
சாத்தி நெற்றியிற் சந்தனத் திலதமிட்
டேத்தியொண் மலர்கொ டிசைந்தமூலத்தாற்
சிரந்தனி லருச்சனை செய்தே சிவமயம்
பொருந்திடத் தன்பாற் பூசனை புரிந்தே
மாசறு நாவினில் வருபிறப் பிறப்பெனு
மாசுசங் கெட வினைத்துமந் திரங்களு
முற்றா தாந்தத் துள்ளொளி பொருந்தச்
சொற்ற மந்திர சுத்தியும் புரிந்தே
தரித்திடு மனத்தன் றருமஞ்ஞானம்
அருந்திவைராக்கி யமைசுவரியத்துட
னேசறு பத்ம மெனுஞ்சடுத் தாசனம்
பூசனை செய்து புதியவெண் டுகில்புனை
பிருமெழின் மஞ்சன வேதிகை தன்னிற்
றருசிவ லிங்கந் தனையுற விருத்தி
யுந்திய வாதன மூர்த்தி மூலஞ்
சிங்கைகொ ளிதயஞ் சிரஞ்சிகை கவசம்
அத்திர மிவையா லட்ட புஷ்பமுஞ்
சுத்திசெய் தருக்கிய தூபதீபங்கொடுத்
தாய்ந்தவத் திரத்தா லகற்றுகின் மாலியம்
போந்திடு தண்டிதன் பூசனைக் கமைத்தே
யமைதரு தூபநீ ராட்டியதன்பின்

கமழ்தரு மெண்ணெய்க் காப்புமாக் காப்பு
மஞ்ச ணெல்லி வழுவறச் சாத்திப்
பஞ்ச கௌவியம் பஞ்சாமிர்தமிவை
யாடி யருளிய தன்பினெய் யாட்டி
நீடிய விளவெந் நீராட் டியபின்
வில்வபத் திரந்தனை விரவமத் தித்து
நல்லகர்ப் பூர நறுந்துக டிமிர்த்தே
விருப்புறு செழும்புனல் வெண்டயிர் செந்தேன்
கருப்பஞ் சாறுபாற் கனிச்சா றிளநீர்
அஞ்செழுத் தாலிவை யபிடே கித்தே
விஞ்சிய முடிக்கலர் விடாது புனைந்தாங்
கிடையிடை தூயநீ ரிசைநயுந் தூபப்
புடையயி லட்ட புஷ்பமுஞ் சாத்திப்
பொருந்திய குச்சுப் புற்கவ சத்தாற்
பரிந்துசாத் தியபின் பதாகைமுத் திரையால்
அதிகமா மூலத் தைமுறை யாட்டித்
பதினொரு மந்திரம் பகர்ந்தினி தாட்டி
மிகுந்திடும் வியோம வியாபிமந் திரத்தாற்
சகத்திர தாரைத் தண்புன லாட்டித்
தண்ணுறும் புனலொடு சந்தனக் குழம்பும்
நண்ணிய பனிநீர் நயப்புட னாட்டித்
தவலறு சுகந்த சந்தனா திகள்பயில்
நவகல சங்க ணயப்புட னாட்டி
யிங்கிப் படிச்செய் திதயமந் திரத்தாற்
சங்கத் தருக்கியத் தண்புன லாட்டி
யாசறு திருவொற் றுடையுஞ் சாத்தி
யீசனைப் பீடத் தெழுந்தரு ளப்பணி

சிவபூஜையகவல்.

டன்னுமைமங் கரன்றனை வாயுகோ ணத்தினு
முன்னுசெந் திருவினை யுத்தர திசையினு
மத்தகு பீட தனைஈசா னியத்திற்
சத்த குருக்க டம்மையு மடைவே
திரம்பெறச் சாத்தித் தென்றிசை முகமுறப்
பிறங்கிய விசேங்க பீடத் தின்கீழ்
ஆதார சத்தி யனந்தா சனத்தொடு
பீடா மனந்தனை யிசையுறச் சாத்திப்
பொருந்தகை யுறுமணிப் பீடக் கால்களிற்
றிருந்திய வங்கி திசைமுத னான்கினுந்
தருமமுதனான் கருகுறச் சாத்தித்
திருமரு வியகீழ்த் திசைமுத னான்கினு
முறைதரு வதன்ம முதனான் கமைத்தே
யுறையதச் சதன மூர்த்துவச் சதனம்
வதனமில் திருந்தி யீரணிற் சாத்தி
பத்மா கந்தம பீச மங்குரம்
தன்மை நாளந் தாதுகன் னிலைகவிதை
பன்மை யுறுப்புறு பத்மா சனத்தையுந்
நிலைமையிற் கேசரஞ் செறியித ழெட்டினும்
வாமை முதலெண் வகைச்சத் திகளுடன்
இடமுறு கர்ணிகை யீசா னத்திற்
றடமுலை மனோன்மணி தன்னையுஞ் சாத்தி
யிதழ்நுதி வட்டத் திரவிமண் டலத்தையும்
அதனதி பதியா மயனையுஞ் சாத்தி
நுண்டரு கேசர நுதியினின் மதியின்
மண்டலந் தன்னொடு மாயனைச் சாத்தித்
தாங்கிய கர்ணிகை தருநுதி வட்டத்
தோங்கநன் மண்டலத் துருத்திரன் றனையுந்

தயங்குகர் ணிகைநடுச் சத்திமண் டலத்து
வயங்கதி பதியா மகேசன் றனையும்
சிவாதனத் தனையுஞ் சிவமூர்த் தியையுந்
தவாததன் மீதிற் சாத்திய பின்னர்
சிரமுதற் பதாந்தந் தெண்டபங் கியினான்
முரணிலீசான முதனியா சம்பண்ணிச்
சத்தியோ சாதந் தனைமுத லாகப்
பத்திசேர் முண்ட பங்கயு மமைத்தே
பங்கபா சனமும் பானிற மேனியும்
பொங்கர வணைத்த பொற்புரி நூலுந்
தெண்கலை வெண்பிறை திருமுடி யைந்துங்
கண்கள்மூ வைந்துங் கரங்களீ ரைந்தினின்
மலைதரு சூலம் வச்சிரங் கதிர்வாள்
கொலைமழு வபயங் கொண்டு வலப்பால்
அரவொடு பாச மதிர்மணி வெங்கனல்
விரவிய வங்குச மேவியிடப்பா
லுறைந்திடுஞ் சதாசிவ வுருவினை நினைந்தே
சிறந்திடும் வித்தியா தேகமா வாகித்
தடத்த திருமுக மைந்தினு நேத்திரங்
கொடுத்தபி னறுமலர் கொண்டவஞ் சலியால்
உருத்திடு தினகர வொளிபயில் பிரணவ
மதித்திடு மூல மந்திர மதனாற்
சுழுமுனை யொலியொடு துவாதசாந் தத்து
வெழுமொரு சோதியை யிறக்கி விந்துவிற்
சந்திர கோடி தருமொளி கரத்தில்
வந்திடப் பிராண மார்க்கந் தன்னிற்
சத்தியோ சாதந் தன்னிலா வாகித்

சிவபூஜையகவல்.

தத்தரு வாம மாதிமூன் றாலும்
தாடனை சந்தி தானசன் னிரோதன
மேவிடக் கொடுத்தே விமலனைச் சுவாகத
மன்பொடு வினவி யருள்பெற் றகிலமும்
இன்பொடு காக்கு மிறைவனா னுன்னைச்
செவ்விய பூசை செய்திடு மளவு
மிவ்வி லிங்கத் திருந்தரு ளென்றே
யிறைவனை வேண்டி யீசா னத்தா
லுறைதரு சுவாகத வருக்கியங் கொடுத்தே
சித்தமா மிதயஞ் சிரஞ்சிகை கவசம்
அத்திர மாமுத லங்கையி றமைத்தே
யேற்றமூ லத்தா லேகத்துவம் பெறச்
சேர்த்திரு கரத்தாற் றிக்குபந் தனமுட
னவகுண் டனஞ்செய் தாவின்முத் திரையுடன்
சிவனெதிர் மகாமுத் திரையுங் கொடுத்தே
கதிதரு காளகர் ணிகையி லிங்க
முதிர்நமஸ்கார முத்திரை தன்னுடன்
முறைதரு மைம்முக முத்திரை காட்டி
யறைதரு பாத்திய மாசம னார்க்கியம்
ஆலமுண் டவனுக் கலராறு கரிசி
மூலமந் திரத்தான் முறைபெறச் சாத்தித்
தூயமூ லத்தாற் றூபமுங் கொடுத்தே
யாயவா சமன மருக்கிய முதவி
5 நிருத்தனுக் கெண்ணெய் நெல்லிமாக் காப்புக்
கருத்தினு லடைவுறக் கருதியாட் டியபின்
ஆர்த்திடு மருக்கியத் தபிடே கித்தே
பாத்திய முதலன பரிவுற நல்கி
மருவுறுநுண் டுகிலான் மாற்றிய பின்னர்

தருபல சுகந்த சந்தன மறுகு
வில்ல மலரொடு வியங்கொளா பரணம்
நல்லபொற் றுகின்மன நயப்பொடு சாத்தி
முன்புறத் தத்துவ மூவகை மந்திரத்
தன்புறப் புட்ப வஞ்சலி செய்தே
கூட்டி யிண்டை தொடைநறு மாலை
யாட்டி யொலிமணி யத்திர மதனாற்
றேசுறு தூப தீபமுங் கொடுத்தபின்
ஆசமனத்துட னருக்கியங் கொடுத்தே
முந்திய மனோரத முத்திரை காட்டி.
யைந்து பிரம மங்கமா றென்னும்
இங்கிவை லயாங்கத் தெழில்பெறச் சாத்திப்
பொங்குபோகாங்க பூசனை புரிதற்
காதர வியம்பி யனுமதி பெற்றே
யோதுமூ லத்தா லொருமலர் சாத்திக்
கிளர்ந்தவீசானங் கிழக்கொடு தெற்கு
விளங்கிய வடக்கு மேற்றிசை யிவைகளின்
மொழியுமீசான முதலோ ரைந்தையும்
பொழிநறு மலராற் பூசித் ததற்பின்
இயலுறு நேத்திர மீசன் றிசையினும்
அயலுறு விதய மங்கித் திசையினும்
ஈசா னத்தி லெழிற்சிரந் தனையுந்
தேசார் நிருதியிற் சிகையது தனையுங்
காட்டிய வாயுவிற் கவசந் தனையுங்
கீட்டிசைதெற்குக் கிளர்மேற் குத்தரம்
அருந்திசை நான்கினு மத்திரந் தனையும்
இருந்திடு பீச னிலயாங்கந்தொறும்

றுடைவினில் வாங்கி யத்திசை யிதழ்களின்
புடையுற விருத்திப் பூசனை புரிந்தே
ஆன வருக்கிய மடைவினி லுதவித்
தேனு பத்மந் திரிசூ லத்தொடு
தூய மகர சுருக்குமுத் திரையிவை
யாயவீசான மாதியையந் தினுக்குஞ்
செங்கரங் குவித்திடு சிறந்த முத்திரை
யங்கமா றுக்கு மடைவினி லளித்துப்
புகலுமூ லத்தாற் புட்பவஞ் சலியுந்
றிகழ்தரு மகாமுத் திரையுங் கொடுத்தே
யீசனுக் கபேத மிவரெனத் தூபம்
ஆசம னத்துட னருக்கிய மளித்தே
யீசன் றிசையி லிசைந்திடுங் கௌரியை
யாசன மூர்த்தி யாதியிற் சாத்தி
நானு விதந்தரு நைவேத் தியந்தனைப்
பானீ யத்தொடு பரிகல மேத்தி
நிகழ்தரு மிவைகளை நிரீக்கண முதலாந்
துகளறு நால்வகைச் சுத்தியுஞ் செய்தே
திரமுறு கௌரிதன் செங்கையிற் கொடுத்தே
யரனைமூ லத்தா லமுதுசெயப் பணிப்
பிரமாங் கங்களைப் பிரிவறக் கருதிப்
பரிகல மொன்றினிற் பரிந்தமு தளித்தே
யாசமனங்கொடுத் தங்கைகடு வட்டி
வாசமோ டடைக்காய் வகைபெற வுதவித்
தந்திடு மருக்கியந் தன்னொடு மூல
மந்திரங் கொண்டு மருமலர் சாத்தித்
தூபமு நால்வகைச் சுத்திநேத் திரந்தரு
தீபமுங் கொடுத்துத் திகழுமா சமனம்

அருக்கிய முதவி யலரா லுகரிசியிற்
றருக்கிய சருவ தத்துவா திபனெனப்
பகருமூலத்தாற் பவித்திரஞ் சாத்தி
நிகரிலா லத்தியின் நிகழ்பரா சத்தியை
மூன்றுற வாதனை மூர்த்திமூலங்கள்
அன்னவை சாத்தி யருக்கியங் கொடுத்தே
சுத்தி பொருந்திய தூபதீபங்கொடுத்
தத்தனைக் கவசத் தங்கையாற் சுற்றி
மிருகமுத் திரைபயில் வெண்ணீ றதனால்
அருகுற முக்கா லமலனைச் சூழ்ந்தே
யெண்ணுமா லத்தி யிடந்தனி லுய்த்தபின்
அண்ணா லுக்காசம ரார்க்கிய முதவி
நீறுதன் னாடி நிகழ்குடை சாமரம்
மாறில்பொன் னால வட்டமும் விசிறியும்
அடைவினி லருக்கிய மாசமனங்கள்
இடையிடை பொருந்த வியற்றிமூலத்தான்
நாதமொ டெழுப்பிய நமோந்தமூலத்தால்
ஆதியைப் புட்ப வஞ்சலி செய்தே
சித்திர மகாமுத் திரையுட னேமுக
முத்திரை தன்னையு முறையுறக் கொடுத்தே
யெய்திடு மவருட னிதையத் தருச்சனை
செய்திடு செபவடஞ் செங்கையில் வாங்கி
நாவலுமூ லத்தா னூற்றெட் டுருவினைப்
பவமகன் றிடச்செபம் பண்ணியதற்பின்
கதமுறு மத்திர கவசமோ டிதயத்
திதயமுதன் மறித் தெதிர்சம்புடித்தே
யறிந்திடு மிரச்சை யவகுண்ட னத்துடன்

செறிந்திட வலது செங்கையிற் பற்றி
அத்த நிறைத்த வருக்கிய முற்பவ
முத்திரை தன்னொடு மூழர்த ஞான்றி
யுன்னருஞ் செபத்தையு முற்றகன் மத்தையுந்
தன்னையும் வரதந் தனிலுறக் கொடுத்தே
யங்கித் திசையி லருள்குரு மூர்த்தியிற்
றங்கிய பரசிவர் தனையருச் சித்தே
நாடிய மேற்றிசை நண்ணிய யோக
பீடமேல் வித்தியா பீடந் தனையும்
பூசித் தரனையும் புட்பவஞ் சலியான்
நேசித் தவன்புகழ் நெஞ்சுறத் துதித்தே
யண்டனை வலஞ்செய் தட்டாங்கமுறத்
தெண்டனிட் டிருகரஞ் சென்னிமேற் கூப்பிக்
கருத்துறு வுபய காலமா திகளில்
அருச்சனை புரிதற் கசத்தா மவர்தாம்
ஆசன மூர்த்தியோ டரனைமூ லத்தாற்
பூசனை புரிந்து போகாங்களில்
நிறைதரு பிரம நேத்திராங் கங்களை
முறைதரு சந்தி முறைமையிற் சாத்திக்
கருத்தா மக்கினி காரியஞ் செய்தற்
குரித்தா மவர்செய் துடனிவே தித்தே
யட்டபுட் பங்கொடுத் தைம்முக முத்திரை
சிட்டனுக் கன்பு சிறந்திட வுதவி
சத்தியோ சாதந் தனைமுத லாக
மொய்த்தலை முடியினு மூலமந் திரத்தாற்
பூசனை யருக்கியம் புரிந்த வதற்பின்
ஆசில்போ காங்க மவைதனைக் கடைவே
சயம்பெறு மந்திரந் தனைமுத லாக

வியம்புமீசான மிறுதிய தாக
வுற்றவ ருக்கிய மொருமையிற் கொடுத்தே
முற்றுநாராச முத்திரை மலரால்
ஆர்த்தமந் திரங்க ளனைத்தையு மெழுப்பி
மூர்த்தியிற் றிவ்விய முத்திரை கொடுசேர்த்
தஞ்செழுத் தருச்சித் தருக்கியங் கொடுத்து
வஞ்சனேன் பிழைகளை மனம்பொறுத் தருளெனத்
தொக்கபின் னினைந்து சோதிலிங் கந்தனைத்
திக்குபாந் தனத்துடன் செய்தவ குண்டனம்
முன்கெழு தேனு முத்திரை கொடுத்தே
தன்குரு முதலோர் தமக்கும் பராமுகங்
கூர்த்த வருக்கியங் கொடுத்து விடுத்தே
மூர்த்திசெய் ததற்பின் புனைமழுச் சண்டனை
யாசன மூர்த்தி யவன்றன் மூலத்தாற்
பூசனை செய்து புனைந்துநின் மாலியந்
தகைமைநை வேத்தியந் தான்முத லாயின
வகைபெறக் கொடுத்தவன் மந்திர மதனுற்
செபித்து நிவேதனஞ் செய்திரு கரங்கள்
குவித்தடி யேன்செய் குறைபொறுத் தருளெனக்
குலவிய வருக்கியங் கொடுத்து விடுத்தபின்
மலர்பயி லருக்கிய மந்திர மனைத்தையும்
நேர்பெற வாங்கி நெஞ்சகத் தமைத்தே
சோர்வினின் மாலிய சுத்தியும் புரிந்தே
யிருபதங் கழுவி யியற்றியாசமனந்
திருநீ றணிந்து செய்து நியாச
மோர்ந்திடு மிருபத் தோருரு வகோரஞ்
சாந்தியின் பொருட்டுத் தகைபெறச் செபித்தபின்

சிவபூஜையகவல்.

மாசறு கயிலைக்கு வாயுறை கொடுத்துப்
பூசனை செய்திடும் பூசனை முறைமையைச்
சொற்றமி ழகவலிற் சொல்லவேண்டுமென
நற்றவ னுலக நாயகன் விளம்பச்
சிற்குண னுரைத்த சிவாகம நோக்கி
நற்கமலையில்வாழ் ஞானப்பிரகாசன்
சொல்லிய பூசைத் தொகையினைப் பழுதற
வல்லவர் வீடுற வல்லவர் தாமே.

சிவபூசையகவல் முற்றிற்று.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவடி வாழ்க.